1805

Registered No. M. 1368.

ஓம்

தருமசீலன்.

29 SEP 1924

பத்திராதிபர்: தி. ஆதீநயினர்.

புத்தகம் 7 } இரத்தாட்சிஹு ஆவணிமீ 1924ஹு செப்டம்பர்மீ { சஞ்சிகை 5.

விஷய சூசிகை.

விஷயம்.		பக்கம்.
1. நீதிச் செய்யுட் சிந்தாமணி	...	81
2. குடியிற்பெண்டிர் மடியினெருப்பு	...	82
3. தர்மோஜயது	...	83
3. இரகு வம்சம்	...	86
5. கூட்டுறவாளர்க்கேற்ற சில துறை	...	95

வருஷசந்தா ரூபா 1.] 1924. [தனிப்பிரதி அணா 0-2-0

DHARMASEELAN PRESS. MADRAS

தருமசீலன் விளம்பரம்.

இது, ஒவ்வொரு தமிழ் மாதந்தோறும் வெளிவரும். இதில், பொது நீதிகள், சங்கமருவிய நூல்களில் வெளிவராத நூலகள், அறிவை விருத்தி செய்யத்தக்க பல நீதிகள், வியாசங்கள், பல விநோதக்கதைகள், நாவல்கள், பொது வர்த்தமானங்கள் முதலிய பல அரிய விஷயங்கள் பிரசுரிக்கப்படும்.

சந்தாவிவரம்.

வருஷம் 1-க்குத் தபாற்செலவு உட்பட இந்தியா, பர்மா, சிலோன் ஆகிய விடங்களுக்கு ரூபா 1—0—0.

பினங், சிங்கப்பூர், தென் ஆப்பிரிக்கா முதலிய விடங்களுக்கு ரூபா 1—4—0; தனிச்சஞ்சிகை விலை அணு 0—2—0.

கவனிப்பு.

1. சந்தாதாரராகச் சேருகிறவர்கள் தங்கள் முழு விலாசத்தையும் சுத்தமாக எழுதி யனுப்பவேண்டும்.

2. முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகை பெற்றுக் கொள்ளவேண்டும்; ஒரு வருஷத்துக்குக் குறைந்து பத்திரிகை கொடுக்க முடியாது; ஒரு வருஷத்துக்கிடையில் சந்தாதாரர்கள் சேர்ந்தால் அவர்களுக்கு முந்தின மாதங்களின் சஞ்சிகைகளும் சேர்த்தனுப்பப்படும்:

3, சந்ததாரர்கள் கடிதமெழுதினுல் தங்கள் சந்தா நம்பரைக் குறிப்பிட்டெழுத வேண்டும்.

4. இப்பத்திரிகைக்கு விஷயதானஞ் செய்வோர் கடிதத்தில் ஒரே பக்கத்தில் சுத்தமாக எழுதியனுப்பவேண்டும்; தூஷணையான விஷயங்களை எழுதலாகாது; பொது நன்மையான விஷயங்களே எழுதவேண்டும்; விஷயங்களைத் திருத்திக் கூட்டவும் குறைக்கவும் நமக்குப் பாத்தியமுண்டு; வியாசக்காரர் அபிப்பிராயங்கள் நம்மைச் சார்ந்தவைகளல்ல; விஷயதானஞ் செய்வோர் தங்கள் முழு விலாசத்தையும் எழுதவேண்டும்.

விளம்பர விகிதம்.

ஒரு பக்கத்திற்கு ஒரு மாதத்திற்கு	ரூபா	10—0—0
அரைப்பக்கத்திற்கு	ரூபா	6—0—0
கால் பக்கத்திற்கு	ரூபா	3—0—0

விளம்பரத்தொகையை முன்பணமாகவே அனுப்பவேண்டும்.

தி. ஆதிநயினர் "தருமசீலன்" ஆபீஸ்,

26. ஆச்சாரப்பன் தெரு, ஜார்ஜ்டவுன், சென்னை.

ஓம்

தருமசீலன்

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு."

(All Rights Reserved.)

29 SEP 1924

புத்தகம் 7 | இரத்தாட்சிஸு ஆவணிமீ 1924ஸு செப்டம்பர்மீ | சஞ்சிகை 5.

நீதிச் செய்யுட் சிந்தாமணி.

பெண்களின் அழகுக்கஞ்சியவர் அமரராவ ரென்பது.

"நிழல்நிமிர் நெடுமதி நிகரில் தீங்கதிர்ப்
பழனவெண் டாமரை பனிக்கு மாறுபோல்
குழல்நிமிர் கிளவியார் கோல மஞ்சினார்
தொழநிமிர்ந் தமரராய்த் துறக்க மாள்வரே."

(இ-ள்.) "ஒளிமிகுந்த பெரிய சந்திரனுடைய ஒப்பற்ற இனிய கிரணத்திற்கு, மருத நிலத்திலுள்ள வெள்ளிய தாமரை மலரானது அஞ்சுகின்ற விதத்தைப்போல, வேய்ங்குழலினது இசை மிகுந்த சொற்களையுடைய பெண்களின் அலங்காரத்திற்கு அஞ்சினவர்கள், பலரும் தொழும்படி சிறப்பு மிகுந்து தேவராகிச் சுவர்க்கத்தை ஆளுவர்" என்பதாம்.

சந்திரனுடைய கிரணம் குளிர்ச்சியைத் தருவதாயிருந்தாலும் தாமரையை வாட்டிவிடும் இயற்கை பொருந்தியது. அதனால், தாமரை மலரானது அதைக் கண்டவுடனே அஞ்சும். அதைப்போல, பெண்களின் அழகானது ஒருவனை இனிமையைத் தருவதாயிருந்தபோதிலும், அப்பெண்களைச் சேரும் ஆடவரைப் பலவிதத்திலும் கெடுத்துவிடக் கூடியது. ஆதலின், ஆடவர்கள் அப்பெண்களின் அலங்காரத்தைப் பார்த்தவுடனே, அவர்களைச்சேர நினையாமல், 'சேர்ந்தால் நாம் கெடுவோம்' என்று அவ்வழகிற்கு அஞ்சவேண்டும். அவ்வாறு அஞ்சினால் அவர்கள் அப்பெண்ணாசையை விடுத்துத் தவத்தைச் செய்வதற்கேதுவுண்டாகும். அத்தவத்தால் அன்னார் தெய்வலோக பதவியை அடைவர்.

நிழல்-ஒளி. நிமிர்தல்-மிகுதல். பழனம் - மருதநிலம். பனித்தல் - அஞ்சுதல். குழல்-கருவியாகுபெயராய் அதனாலாம் ஓசையைஉணர்த்தி நின்றது.

(சீவகசிந்தாமணி 1555)

210680

தருமசீலன்.

இரத்தாட்சி ௵ ஆவணி ௴.

"துடியிற் பெண்டிர் மடியி னெருப்பு."

இதன் பொருள்:—"துடி-துடிக்கின்ற, (அதாவது அமரிக்கையில்லாத), இல்பெண்டிர்-மனையாட்டி, (அவனைக் கட்டிக்கொண்ட புருஷனுக்கு), மடியில்-அவன் மடியிற் கட்டிக்கொண்ட, நெருப்பு-அக்கினியாவாள்." என்பதாம்.

உலகத்தில் ஒருவனுக்கு இல்லக்கிழத்தியாக அமைபவள் மிக்க பொறுமையுடையவளா யிருக்கவேண்டும். அப்படி யிருந்தால் மாத்திரந்தான், பலர்க்கும் உதவிசெய்து எவ்வகைத் தருமங்களையும் இயற்றி இல்லறத்தைச் செவ்வனே நடத்துவதற்கு ஏதுவுண்டாகும். அங்ஙனமின்றி, அம் மனையாள் மிக்க துடி துடிப்புடையவளா யிருந்தால் தன் வீட்டிற்கு வரும் யாசகர்களை யெல்லாம் கடிந்து துரத்துவாள்; பெரியோர்களை நிந்திப்பாள்; புருஷன் செய்ய நினைக்கும் நற்காரியங்களை யெல்லாம் தடுப்பாள்; பொருள் செலவாகி விடுமென்று, தேவபூசனைகளையும், மற்ற தான தர்மங்களையும் செய்ய இசையமாட்டாள். புருஷனோடு எப்பொழுதும் எதிர்த்துப் பேசுவாள்; டலரோடும் சண்டை விளைவித்துக்கொண்டே யிருப்பாள்; குடும்பத்தில் எப்பொழுதும் துக்கத்தையே உண்டாக்கிக் கொண்டிருப்பாள். இப்பேர்ப்பட்ட மனைவியைக்கொண்ட புருஷனுக்கு இடைவிடாது எப்பொழுதும் உபத்திரவமே உண்டாகிக் கொண்டிருக்கும். அவன் தன் மடியில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருந்தால் அத் தீயானது எப்படி அவனை ஓயாமல் சுட்டு அவனுக்கு உபத்திரவத்தை உண்டாக்கிக் கொண்டிருக்குமோ அப்படியே அந்தப் பெண் அவனுக்கு எப்பொழுதும் தீராத்துயரத்தை உண்டாக்கிக் கொண்டிருப்பாள். அதுபற்றியே ஔவையார், அத்தகைய மனைவியைக் கட்டிக்கொண்டிருப்பது, நெருப்பை மடியிற் கட்டிக் கொண்டிருப்பதற்கு நிகராகுமென்று இந்நீதியைக் கூறினர். ஆதலின், இல்லறம் நடத்தவிரும்புவோர் இந்நீதியைக் கடைப்பிடித்துச் சாதுவான மனைவியைக்கொண்டு செவ்வனே இல்லறத்தை நடத்தி நற்கதி யடைவாராக.

(திருவருட்சகாயம்.)

ஸ்ரீ:

தர்மோஜயது.

ஸ்ரீமத் தர்மப்ரபாவனுதத்பரர்களாகிய ஸகல ஜைன பாந்தவர்களே!

இந்தக் கலிகாலத்தில் ஸத்தர்ம ரக்ஷணைக்கும் ப்ரபாவனைக்கும் ஸ்ரீ ஜிநாலயமானது மூலஸ்தம்பமாக விருக்கிறதென்று பெரியோர்கள் சொல்லும் வசனம் எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. ஜிநாலயத்திற்குச் சென்று சாந்த முத்திரையோடு விளங்கும் ஸ்ரீ ஜிநபிம்பத்தை தர்சித்தவுடனே எப்பேர்ப்பட்ட விகாரமுள்ள மனதானுலும் தக்ஷணமே பவித்ரமாகும். பிராதக்காலத்தில் படுக்கையை விட்டெழுந்தவுடனே கிரஹஸ்தர்களாகிய ஸ்திரீ புருஷர்கள் சௌசஸ்நான முதலானவைகளால் தேகசுத்தி செய்துகொண்டு பவித்ரமான வஸ்திரத்தைத் தரித்து ஸ்ரீ ஜிநாலயமடைந்து ஸ்ரீ ஜிநபிம்பத்தைத் தர்சித்த பிறகே எந்த கிரஹ கார்யங்களையும் செய்ய ஆரம்பிக்கவேண்டும். இப்படி பிராதக் காலத்திலேயே ஸ்ரீ ஜிநபிம்ப தர்சனை செய்தால் அந்த பிராதக்காலம் ஸுப்ரபாதம் அதாவது சுபமான பிராதக்கால மெனப்படும். மேலும் அந்தத்தினமே ஸுதினமாகும்.

எந்த ஊரில் ஸ்ரீ ஜிநாலயமில்லையோ அந்த ஊரில் வாசஞ்செய்வது ஜைன பாந்தவர்களுக்கு வனவாஸத்தைப் போன்றிருக்கும். பிராதக்காலத்தில் ஸ்ரீ ஜிநபிம்பதர்சனை செய்யாத தினம் துர்த்தினமாகும். உலகத்திலுள்ள ஸகல மங்களங்களைக் காட்டிலும் ஸ்ரீ ஜிநேச்வரனது மூர்த்தியின் தர்சனை பரமமங்கள மென்று ஞானிகள் உபதேசித்திருக்கிறார்கள். பிராதக்காலத்தில் முதலில் ஸ்ரீ தேவதாஸேவையை முடித்துக்கொண்டு கிரஹஸ்தன் எந்த உத்யோகத்திற்குச் சென்றாலும் அவன் ஜெயசாலியாக வருவான். பம்பாய், கல்கத்தா, காசி, ஆக்ரா, கான்பூர், ஜயபுரம், டில்லி, முதலான நகரங்களில் வஸிக்கும் ஜைன பாந்தவர்கள் அதிகாலையில் முதன் முதல் ஜிநாலயஞ் சென்று ஸ்ரீ தேவதா தர்சனையும் பூஜையும் செய்யாமல் எந்த கிரஹ கார்யங்களிலும் பிரவேசிப்பதில்லை என்பதை உத்தரதேச யாத்திரை செய்திருக்கும் இத்தேச கனவான்கள் பார்த்திருக்கக்கூடும். அதனாலேயே அந்த மஹாசயர்கள் தன, கனக, குடும்ப, வித்தை முதலான ஸம்பத்துள்ளவர்களாக விருக்கின்றார்கள்.

எந்த தேசத்தில் இந்த நியமமில்லையோ அந்த தேசத்தில் தரித்திரமென்னும் பிசாசு ஸஞ்சரித்துக் கொண்டிருக்கும்.

நமது தக்ஷிண தேசத்தில் மதராஸானது பெரிய நகரமாக விளங்குகிறது. இந்த நகரத்திற்கு அனேக ஜைன பாந்தவர்கள் வராத நாளில்லை. அப்படிவரும் மஹாசயர்களில சிலர் வியாபார நிமித்தமாகவும், சிலர் கோர்ட்டு (கச்சேரி) விவகார கார்யமாகவும், சிலர் யாத்ரீகர்களாகவும், சிலர் வித்யாப்பியாஸத்திற்காகவும் வருபவர்களாக விருக்கிறார்கள். இப்படிக்கு வெவ்வேறு உத்தேசத்துடன் இந்நகருக்குவரும் ஜைன பாந்தவர்களுக்கு தர்சனைக்காக ஒரு ஸ்ரீ ஜிநாலயமிருக்க வேண்டியது அத்யாவசிய மென்பது முன்பே சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் வெளியூர்களிலிருந்து வருபவர்கள் தங்குவதற்கு ஒரு சத்திரமும் மிகவும் அவசியமாக விருக்கிறது. ஆனால் தற்சமயம் இவ்விரண்டும் இப்பட்டணத்திலில்லாமலிருப்பது எவ்வளவு விசனகரமான தென்பதைத் தாங்களே யோசியுங்கள்.

மேலே விவரித்தபடி இவ்வளவு தொந்தரவுகள் நமது ஜைன சகோதரர்களுக்கிருந்தும் அதை நிவர்த்திக்கும் விஷயத்தில் நமது தக்ஷிண தேசபார்ந்தவர்கள் சிரத்தை கொள்ளாமலிருப்பதைப் பார்த்து ஆச்சரியமடைய வேண்டியதா யிருக்கிறது.

மேற்கண்ட குறைகளை நிவர்த்திப்பதற்காக மதராஸில் ஒரு ஸ்ரீஜிநாலயமும் சத்திரமும் ஸ்தாபிக்க வேண்டுமென்று ஸங்கல்பித்து சுமார் நான்கு வருஷங்களாய் நாம் பிரயத்தினப் பட்டுக்கொண் டிருக்கிறோம். சில கனவான்கள் இயன்ற அளவு திரவிய சகாயம் செய்திருக்கிறார்கள். சிலர், சகாயஞ் செய்வதாக வாக்தானம் செய்திருக்கிறார்கள். ஆனால் இதுவரையில் கிடைத்திருக்கும் திரவிய சகாயம் சுவல்பமானபடியால் நமது உத்தேசம் நிறைவேறக் கூடியதாயில்லை. இந்த மஹாபட்டணத்தில் நமது நோக்கம் ஸபலமாக வேண்டுமானால் போதியவளவு திரவிய சகாயம் வேண்டியிருக்கிறது. ஆனதால் தர்மத்தில் ப்ரீதியுள்ள கனவான்கள் தங்கள் தங்கள் சக்திக்கேற்றவாறு திரவிய சகாயம் செய்யவேண்டியதா யிருக்கிறது. தனவான்கள் ஏழைகள் புருஷர்கள் ஸ்திரீகள் என்ற பேதத்தைப் பாராட்டாமல் எல்லா தர்மீகர்களும் தங்கள் பங்கின் புண்யத்தை ஸம்பாதித்துக் கொள்வதற்காகத் தங்கள் இச்சானுசாரம் பணஉதவி செய்யலாம்.

இந்த தர்மகார்யத்தை நடத்துவதற்காக "மதரூஸ் ஸ்ரீ திகம்பர ஜைன தேவாலய சத்ரகமிட்டி" என்ற ஒரு சபை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு நாம் அக்ராஸனராகவும், மதரூஸ் ஜார்ஜ்டவுன் ஆச்சாரப்பன் தெரு, 26-நெ. வீட்டிலுள்ள ம-ா-ா-ஸ்ரீ, தி. ஆதிநைனாவர்கள் கார்யதரிசியாகவும் பொக்கிஷதாராகவும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறோம். திரவியஸகாயம் செய்தவர்களுக்குச் சங்கத்தின் சாபாவும் பணம்பெற்றுக் கொண்டவர்களின் கையெழுத்தோடு கூடிய ரசீதும் கொடுக்கப்படும்.

தற்சமயம் 12000 ரூபாய்க்கு ஷை சென்னை சுப்ரமண்ய முதலியார் தெருவில் ஒரு வீடு வாங்குவதற்கு நிச்சயித்து, 3-மாதத்திற்குள் பூராத்தொகையும் கொடுத்து வீட்டைச் சுவாதீனம் செய்துகொள்ளுகிறதென்ற கண்டிஷனின்மேல் ஒப்பந்தம்சென்ற 19-8-24ல் ரிஜிஸ்டராகி யிருக்கிறது. இந்த அக்ரிமெண்டின்படி 3-மாத்திற்குள் எல்லாத் தொகையையும் கொடுத்து ஷை வீட்டைச் சுவாதீனஞ் செய்துகொண்டு அதில் ஸ்ரீ ஜிநபிம்பத்தை ஸ்தாபிப்பதற்கு மாடியின்மேல் ஒரு கட்டிடம் கட்டவேண்டியிருக்கிறது. நம்முடைய சௌகர்யத்திற்காக அந்தக் கட்டிடத்தில் இன்னும் சில சீர்திருத்தங்களும் செய்யவேண்டி யிருக்கின்றன. இந்த உத்தேசங்களுக்குக் குறைந்த பக்ஷம் இன்னும் 15000 ரூபாய் வேண்டியதாயிருக்கும். பிரதிஷ்டை முதலான கார்யங்களுக்கு வேறே பொருளுதவி வேண்டும். ஸ்ரீ தேவதா கடாக்ஷமும் தங்களுடைய புண்யமும் சகாயமாக விருந்தால் இன்னும் இந்த ஸ்தாபனத்தை கிரமமாக அபிவிருத்திக்குக் கொண்டுவந்து தக்ஷிண தேசத்து ஜைன ஸ்தாபனங்களுக்கு இதை ஒரு வழி காட்டியாகச் செய்து விடவேண்டுமென்பது நம்முடைய முக்கியமான கோரிக்கையாக விருக்கிறது.

இந்த ஸகலவிதமான தர்ம விருத்திகளும் புண்யவான்களாகிய தங்களுடைய பலவிதமான சகாயத்தையே சார்ந்திருக்கின்றன. தர்மமானது தர்மீகர்களை அவலம்பித்திருக்கிறது. தர்ம ரக்ஷணையும் தர்மவான்களாலேயே ஆகத்தக்கதா யிருக்கிறது.

நல்ல பூமியில் விதைத்தவிதை அதிக பலனைக் கொடுப்பது போல் அநேக ஜனங்களுக்கு உபகாரமான பிரஸித்த க்ஷேத்திரத்தில் ஸ்தாபிக்கும் ஸ்ரீ ஜிநாலயமுதலான தர்ம ஸ்தாபனங்களுக்குத் தானமாகக் கொடுக்கும் தங்களது திரவியம் இதர ஸாமான்ய

விடத்தில் செலவழிக்கும் திரவியத்தைக் காட்டிலும் அதிகமாகிய புண்யத்தையும் கீர்த்தியையும் ஸம்பாதித்துக் கொடுக்கக்கூடியதா யிருக்கிறது.

இதி சுபம் மங்களம்.

ஸமஸ்த ஜைன பந்துக்களின்
ஹித சிந்தகராகிய
ஸ்ரீ நேமிஸாகர வர்ணீஜீயவர்கள்.

இரகு வம்சம்.

(முன்தொடர்ச்சி புத்தகம்-7, சஞ்சிகை-4, பக்கம் 68)

(பத்தாவது ஸர்க்கம்.)

பின்னர் இந்திரனைப்போல் தேஜஸ்ஸுள்ளவனும், மிகுந்த ஸம்பத்தையுடையவனுமான தசரதன், சுமார் பதினாயிர வருஷகாலம் பூமியைப் பரிபாலித்துவந்தனன். ஆயினும், அவ்வரசன், பிதுர்க்கடனிலிருந்து விடுதலை பெறுவதற்குக் காரணமாயும், உதித்தவுடன் சோகமென்னும் இருளைப் போக்குவதாயும், புதல்வனென்று பெயருள்ளதாயுமுள்ள தேஜஸ்ஸைப் பெறவில்லை. காரணத்தை விரும்பிப் பிற்காலத்தி லுதிக்கப்போகும் மக்களையுடைய தசரதன், கடைவதற்கு முன் மறைந்திருக்கும் இரத்தினங்களையுடைய பாற்கடலைப்போல் வெகுகாலம் இருந்தனன். மனதை வென்றவர்களும் * 'ருத்துவிக்கு'களுமான ரிஷ்ய சிருங்கர் முதலிய பெரியோர்கள், புதல்வரை விரும்பும் தசரதருக்காகப் புதல்வரைப் பெறுவதற்குக் காரணமான ஓர் யாகத்தை ஆரம்பித்தனர். அப்பொழுது இராவணன் வருத்துவதைப் பொறுக்காத தேவர்கள், வேனிற்காலத்தினால் வருந்தும் பாட்டைசாரிகள் நிழல் நிறைந்த மரத்தை யடைவதுபோல, மஹாவிஷ்ணுவிடஞ் சென்றனர். தேவர்கள் பாற்கடலை யடைந்ததும் திருமால் யோகநித்திரையிலிருந்து விழிப்படைந்தனர். விளம்பமின்மை, காரியசித்தி விரைவில் உண்டாவதைத் தெரிவிக்கின்ற தன்றோ?

அப்பால் தேவர்கள், ஆதிசேஷனது உடலென்னும் அரியணையில் அமர்ந்திருக்கும் மஹாவிஷ்ணுவைக் கண்டனர். அவருடைய

---

* ருத்துவிக்குகள் = தக்ஷிணையை வாங்கிக்கொண்டு யாகத்தில் எஜமானின் காரியத்தைச் செய்கின்ற பிராமணர்கள்.

சரீரம் ஆதிசேஷனது படங்களிலுள்ள இரத்தினங்களின் காந்திகளால் மின்னிக்கொண் டிருந்தது. செந்தாமரையில் வீற்றிருக்கும் ஸ்ரீதேவி வெண்பட்டால் மறைக்கப்பட்ட ஒட்டியாணத்தையுடைய தனது மடியில் திருமால் நீட்டிக்கொண்டிருந்த கால்களைத் தனது தளிர்போன்ற கைகளால் வருடிக்கொண் டிருந்தனள்.

மலர்ந்த தாமரை மலர்போன்ற கண்களையும் இளவெய்யிலைப் போன்ற ஆடையையும் யோகிகளுக்குச் சுகமான தரிசனத்தையும் பெற்றுள்ள மாதவன், தாமரை மலரையே கண்களாகவும் இளவெய்யிலையே ஆடையாகவும் காலையில் சுகமான தரிசனத்தையுமுடைய * சரத்காலத்துப் பகலைப் போலிருந்தனர். அன்றியும் அவர் தமது பெரிய மார்பினில் ஸ்ரீதேவி அழகு பார்க்கும் கண்ணாடியாயும் கடல் நீரின் ஸாரமாயுமுள்ள † கௌஸ்துப ரத்தினத்தை அணிந்து கொண்டிருந்தனர்; அம்மணியின் காந்தியினால் "ஸ்ரீவத்ஸம்" என்னும் மச்சம் விளங்கியது. கிளைகளைப் போன்றவைகளும், தேவாபரணங்களால் அலங்கரிக்கப் பட்டவைகளுமான கைகளைப் பெற்றுள்ள திருமால், பாற்கடலின் மத்தியிலுண்டான மற்றொரு ‡ பாரிஜாத விருக்ஷத்தைப் போலிருந்தனர். அப்பொழுது அசுர ஸ்திரீகளின் கன்னங்களிலுள்ள கொழுப்புக்குறியை அழித்தவைகளான அஸ்திர தேவதைகள் வெற்றியை அறிவித்துக்கொண் டிருந்தனர். அப்பொழுது ஆதிசேஷனோடு இயற்கையான விரோதத்தை விட்டவனும், § குலிசத்தின் அடியாலுண்டான வடுக்களை அடையாளமாக வுடையவனும், வணக்கமுள்ளவனுமான கருடன், திருமாலை அஞ்சலிசெய்து சேவித்துக்கொண் டிருந்தனன். கேசவன் யோக நித்திரையின் முடிவில் நிர்மலமாயும் பாவனமாயுமுள்ள பார்வையினால் தாம் சுகமாகத் தூங்கியதைப்பற்றி வினவும் பிருகு முதலிய முனிவர்களுக்கு அநுக்கிரகஞ் செய்துகொண் டிருந்தனர்.

பின்னர் தேவர்கள் அசுரர்களையழிக்கும் அச்சுதனை நமஸ்கரித்தனர். உடனே அவர்கள், துதிக்கத்தக்கவரும், மனதிற்கும் வாக்குக்கும் விஷயமாகாதவருமான விஷ்ணுவைத் துதிக்கலாயினர்:—"ஆதியில் உலகத்தை ஆக்கியும் அதன் பின்பு காப்பாற்றியும் பிறகு அழித்தும் வருகின்ற பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் என்ற மூவ்விதமான உருவத்தையுடைய உமக்கு நமஸ்காரம். இனிப்பு

* சரத்காலம் = கூதிர்காலம். † கௌஸ்துபம் = பாற்கடலிலிருந்துண்டாகிய இரத்தினம். ‡ பாரிஜாதம் = கற்பகதரு ஐந்தில் ஒன்று. § குலிசம் = வஜ்ராயுதம்.

ரஸத்தையுடைய மழைநீர், பலவிடங்களில் விழுந்து, அந்தந்த ரஸங்களை யடைவதுபோல, விகாரமற்ற நீரும் ஸத்வம், ரஜஸ், தமஸ் என்னும் குணங்களுக்குத் தக்கவாறு அவஸ்தைகளை அடைகின்றீர்; ஹே தேவரே! நீர் அளவிடக்கூடாதவராயினும் உலகத்தை அளக்கின்றீர்; விருப்ப மற்றவராயினும் விருப்பங்களை நிறைவேற்றுகின்றீர்; பிறரால் ஜயிக்கப்படாதவராயினும் யாவரையும் ஜயிக்கின்றீர்; சூக்ஷ்ம ரூபியாயிருந்தும் ஸ்தூல ரூபத்திற்குக் காரணமா யிருக்கின்றீர். தேவ சிரேஷ்டரே! நீர் அந்தரங்கத்திலிருந்தும் அறியப்படாமையால் தூரத்திலிருக்கின்றீர்; யாதொன்றிலும் விருப்ப மற்றவரா யிருந்தும் தவஞ் செய்கின்றீர்; பிறர் துக்கத்தைப் போக்குகின்றவராயினும் துக்க மற்றவரா யிருக்கின்றீர்; ஆதியற்றவராயினும் மூப்பற்றவரா யிருக்கின்றீர்; இவ்வாறு ஆன்றோர் கூறுகின்றனர். நீர் யாவற்றையும் அறிந்தவராயினும் எவராலும் அறியப்படாதவரா யிருக்கிறீர்; யாவற்றிற்கும் காரண பூதராயிருந்தும் நீர் காரண மற்று உண்டானவர்; யாவருக்கும் தலைவராயிருந்தும் தலைவனற்றவரா யிருக்கின்றீர்; நீர் ஒருவராயினும் பல வுருவங்களை அடைகின்றீர்; நீர் ஸப்த ஸாமங்களால் கானஞ் செய்யப்படுகின்றீர்; ஸப்த சமுத்திரங்களின் ஜலத்தில் படுத்துக் கொண்டிருக்கின்றீர்; * ஸப்தார்ச்சிஸ்ஸை முகமாகக் கொண்டிருக்கின்றீர்; ஸப்த லோகங்களுக்கும் முக்கிய ஆசிரயமா யிருக்கின்றீர்; இவ்விதம் பெரியோர் கூறுகின்றனர். † சதுர்வர்க்கத்தைப் பயனாகவுடைய ஞானமும் காலத்தின் அவஸ்தைகளான நான்கு ‡ யுகங்களும் நான்கு § வர்ணங்களும் சதுர்முக ரூபியான உம்மிடமிருந்து உண்டாயின.

யோகிகள், அப்பியாசத்தினால் அடக்கிய மனதினால் ஹ்ருதயத்திலுள்ள ஜோதிஸ்வரூபியான உம்மைத் தியானிக்கின்றனர். நீர் உற்பத்தியற்றவராயினும் பிறவிப்பைப் பெறுகின்றீர்; இச்சையற்றவராயினும் பகைவரை அழிக்கின்றீர்; எப்பொழுதும் விழிப்புள்ளவராயினும் யோகநித்திரையில் ஆழ்ந்திருக்கின்றீர்; இத்தகைய உமது உண்மை நிலையை அறிபவன்யார்? சப்தம் முதலிய விஷயங்களை அநுபவிப்பதற்கும் அரிய தவத்தைச் செய்வதற்கும் பிரஜைகளைக் காப்பதற்கும் எதிலும் சம்பந்தமற்றிருப்பதற்கும் நீர்

---

* ஸப்தார்ச்சிஸ் = ஏழு சுவாலைகளையுடைய நெருப்பு. † சதுர் வர்க்கம் = தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்பவை. ‡ நான்கு யுகங்கள் = கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்பவை. § நான்கு வர்ணங்கள் = பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்ரர் என்பவர்.

ஒருவரே வல்லமையுள்ளவரா யிருக்கின்றீர். கங்கையின் பிரவாகங்கள் கடலிற்சென்று விடுவனபோல * 'ஆகமங்க'ளால் பலவாறு பேதமடைந்தவைகளும், ஸித்திக்குக் காரணமானவைகளுமான வழிகள்யாவும் உம்மிடமே வந்து சேருகின்றன. உம்மிடமே மனதைச் செலுத்திச் சகல கர்மங்களையும் உமக்கு அர்ப்பணஞ் செய்தவர்களும் பற்றற்றவர்களுமான யோகிகள் மோக்ஷமடைவதற்கும் நீரே சாதனமாயிருக்கின்றீர். பிரத்திபக்ஷமான உமது பூமி முதலிய ஐசுவரியமும் அளவிடக் கூடவில்லை. † வேதம் ‡ அநுமானம் இவற்றால் அறியக்கூடிய நீர் "அளவிடக் கூடாதவர்" என்று கூறவும் வேண்டுமோ? நீர் நினைத்த மாத்திரத்தினால் யாவரையும் பரிசுத்தமாக்குகின்றீர்; இதனாலேயே உமது தரிசனம் முதலிய கிரியைகள் எத்தகைய பயனையளிக்குமென்று அறிய முடியவில்லை. கடலின் இரத்தினங்கள் போலும் சூரியனின் காந்திகள்போலும் வாக்கிற்கும் மனதிற்கும் எட்டாத உமது சரித்திரங்கள் ஸ்தோத்திரங்களில் அடங்குவதில்லை. நீர்பெறாததும் பெறத்தக்கதும் ஒன்றும் இல்லை. நீர் பிறவியையும் கிரியையையும் பெறுவதற்குக் காரணம் உலகத்தோரை அநுக்கிரகிப்பதேயாகும். உமது மகிமையைக் கூறி ஒழிவடைவது, சிரமத்தினாலும் அசக்தியினாலுமே யன்றிக் குணங்களின் முடிவினாலன்று" என்றனர்.

இவ்வாறு தேவர்கள் விஷ்ணுவை மகிழச் செய்தனர். தேவர்கள் புருஷோத்தமனிட முள்ள குணங்களையே கூறினமையால் அது, துதியன்று. பின்பு தேவர்கள் குசலப்பிரச்னத்தினால் பிரீதியை வெளிக்காட்டிய § 'தாமோதர'னிடம் ராக்ஷஸ னென்னும் கடல் ‖ பிரளயகால மின்றியே கரைபுரண்டு வந்தமையால் பயமடைந்திருப்பதைத் தெரிவித்தனர். அப்பொழுது பகவான், சமுத்திர கோஷம்போல் கம்பீரமான சப்தத்தினால் பதில் சொல்லலானார். அவ்வொலியால் கடற்கரைக்கருகேயுள்ள மலைக்குகைகளில் எதிரொலி உண்டாயிற்று. புராணகவியாகிய பகவானால் எழுத்துக்களின் உற்பத்தி ஸ்தானங்களில் நன்கு உச்சரிக்கப் பெற்றதும்

---

* ஆகமங்கள் = மூன்று வேதங்களும், யோக சாஸ்திரமும். † வேதம் = பிரத்தியக்ஷத்தாலும் அநுமானத்தாலும் எவரும் எளிதி லறியமுடியாத வஸ்துவைத்தெளிவாகக் காட்டுஞ் சொன்மயக்கருவி. ‡ அநுமானம் = அநுமிதிப் பிரமையின் அஸாதாரணகாரணம் அநுமானம். § தாமோதரன் = யசோதை கயிற்றால் வயிற்றில் கட்டியதால் இப்பெயர் வந்தது. ‖ பிரளயகாலம் = ஊழிக்காலம் ; நாசகாலம்.

*ஸம்ஸ்காரத்தோடு கூடியதுமான வார்த்தை ஸபலமாகவே வெளிக் கிளம்பியது. விஷ்ணுவின் வதனத்திலிருந்து பற்களின் காந்தியோடு வெளிவந்த பாரதியானது பாதத்திலிருந்து பெருகி எஞ்சிய † பாகீரதியே மேலே பெருகி வருவதுபோல விளங்கியது,

பின்பு திருமால் தேவர்களைப் பார்த்து, "ஏ! தேவர்களே! தமோ குணம், பிராணிகளின் ஸத்வம் ரஜஸ் என்னும் குணங்களை ஆக்கிரமித்திருப்பதுபோல, இராவணன் உங்களுடைய மகிமையையும் பராக்கிரமத்தையும் குறைத்திருப்பது எனக்குத் தெரியும். எதிர்பாராமல் உண்டான தீவினையினால் நல்லோர் மனம் தவிப்பதுபோல, இராவணனால் உலக முழுவதும் தத்தளிப்பதையும் நான் அறிந்திருக்கிறேன். நம்மிருவருடைய காரியமும் ஒன்றாயிருப்பதால் தேவர்கோன் என்னை இக்காரியத்தைச் செய்யவேண்டுமென்று வேண்டிக்கொள்வது அனுவசியமாகும். காற்று நெருப்புக்குத்தானே உதவி செய்கின்றது.

"முன்பு இராவணன் சிவனை மகிழ்விப்பதற்காகத் தனது தலைகளைக் கத்தியினால் கொய்கையில், எனது சக்கிராயுதத்திற்குச் சரியான பாகமென்று நினைத்ததுபோல பத்தாவது தலையை வெட்டாமல் ஒதுக்கி விட்டனன். சந்தனமரம், ஸர்ப்பம் தன் மீதேறிச் சுற்றி யிருப்பதைப் பொறுத்திருப்பதுபோல, நான், பிரம்மதேவன் வரமளித்திருப்பதால் அத்துஷ்டன் செழித்திருப்பதைப் பொறுத்தேன். முன்பு இராவணன் தவத்தினால் பிரம்ம தேவனை மகிழ்வித்து, மனிதரைப் பொருட்படுத்தாமல் தேவரிடமிருந்து தனக்கு மரணம் நேராமலிருக்குமாறு வேண்டிக் கொண்டான். நான் தசரதருக்குப் புதல்வனாக அவதரித்து, கூரிய கணைகளால் இராவணனது தலைகளென்னும் தாமரைக்குவியலை அறுத்துத்தள்ளிப் போர்க்களத்திற்குப் பூஜை செய்யப் போகின்றேன். ஏ! தேவர்களே! யாகஞ் செய்பவர்கள் உங்களுக்குக் கற்பித்த ‡ அவிர்ப்பாகத்தை மாயாவிகளான ராக்ஷஸர்கள் பருகாவண்ணம் நீங்கள் விரைவில் கிரகித்துக் கொள்ளுங்கள். ஆகாய மார்க்கத்தில் விமானத்தினால் சஞ்சரிக்கும் புண்ணியசாலிகள் § புஷ்பக விமானத்தைக்கண்டு பயந்து

* ஸம்ஸ்காரம் = அநுபவத்தா லுண்டானதும் நினைவிற்குக் காரணமாயிருப்பதும் 'ஸம்ஸ்கார'மாம். † பாகீரதி = கங்கை. ‡ அவிர்ப்பாகம் = யாகத்தில் தேவர்களுக்குக் கொடுக்கப்படும் உணவு. § புஷ்பகம் = இது குபேரனுடைய விமானம்; நினைத்தவிடஞ் செல்லக்கூடியது; இராவணன் குபேரனிடமிருந்து இதைப் பிடுங்கிக் கொண்டான்,

இனி மேகங்களில் மறைய வேண்டாம்; நீங்கள் சிறைப்பட்ட தேவ ஸ்திரீகளின் பின்னல்களை அவிழ்த்து விடலாம் அப்பின்னல்களை இராவ்ணன் பலவந்தமாகப் பிடித்திழுக்காமைக்குக் காரணம் *"நளகூபர"னிட்ட சாபமேயாகும்" என்றார்.

இவ்வாறு விஷ்ணுவென்னும் மேகம், இராவணனென்னும் † அவக்கிரகத்தினால் வாடிய தேவர்களென்னும் பயிரை வார்த்தையென்னும் ‡ அமிருதத்தினால் நனைத்துவிட்டு மறைந்தது. மரங்கள் தமது அம்சங்களான மலர்களால் காற்றைத் தொடர்வதுபோல, இந்திரன் முதலிய தேவர்கள் தமது காரியத்தில் முயற்சியுள்ள விஷ்ணுவைத் தமது அம்சங்களால் பின்தொடர்ந்தனர். (சுக்கிரீவன் முதலிய வானரங்களாக அவதரித்தனர். என்பது கருத்து.)

பின்னர் தசரதனது 'புத்திரகாமேஷ்டியாகத்தின் முடிவில் அக்கினியிலிருந்து ஓர் புருஷன் வெளிக்கிளம்பினன். அதனால் ருத்துவிக்குகள் யாவரும் ஆச்சரியமடைந்தனர். அப்புருஷன் ஓர் பொற்பாத்திரத்தைக் கைகளில் எடுத்துவந்தனன். அதில் ஆதிபுருஷன் பிரவேசித்திருப்பதால் மிகுந்த பளுவுள்ளதும் பாலில் பக்குவஞ் செய்ததுமான அன்னமிருந்தது. இந்திரன் பாற்கடலில் பிரகாசித்த அமிருதத்தைக் கிரகித்ததுபோல, தசரதன், பிரஜாபதியைச் சேர்ந்த புருஷன் கொடுத்த அன்னத்தை யேற்றுக் கொண்டனன். இதனால் பிறரிடமில்லாத குணங்கள் தசரதனிடமிருப்பது தெரிய வந்தது. ஏனெனில் மூவ்வுலகிற்கும் காரணபூதரான விஷ்ணுவும் அவரிடம் உற்பத்தியாவதற்கு விரும்பினாரன்றோ? சூரியன் இளவெயிலை ஆகாயத்திலும் பூமியிலும் பிரித்துவைத்ததுபோல, அவ்வரசன் "சரு"வென்னும் வைஷ்ணவ தேஜஸ்ஸை கோசலைக்கும் கைகேயிக்கும் பிரித்துக் கொடுத்தனன். கோசலை தனக்குப் பட்டமகிஷியாதலாலும் கைகேயி அன்புள்ளவளாதலாலும் தசரதன், அவர்கள் மூலமாகப் பாயஸத்தைச் சுமித்திரைக்குக் கொடுக்க விரும்பினன்.

---

* முன்னொரு சமயம் இரம்பை 'நளகூபர'னைக் குறித்துச் செல்லுகையில் நடுவழியில் இராவணன் சந்தித்து, அவளைப் பலவந்தமாகப் புணர்ந்தான். பின்பு இதனைக் கேள்வியுற்ற நளகூபரன் "இனிப் பெண்களைப் பலவந்தம் பண்ணினால் உன்தலை நூறுபங்காக வெடிக்கும்" என்று இராவணனுக்குச் சாபமிட்டான். † அவக்கிரகம் = மழையின்மை; ‡ அமிருதம் = அமுதம்; தண்ணீர்.

ஸர்வஜ்ஞனும் கணவனுமான அரசனது அபிப்பிராயத்தை யறிந்த கோசலையும் கைகேயியும் தமக்குக்கிடைத்த பாயஸத்தை இருபங்காகக் கூறுசெய்து அவற்றைச் சுமித்திரைக்குக் கொடுத்தனர். பெண்வண்டு யானையின் * கபோலத்திலுள்ள மதரேகைகளுக்குப் பிரியமாயிருப்பதுபோல, சுமித்திரை அவ்விரு சக்களத்திகளுக்குப் பிரியமுள்ளவளா யிருந்தனள். அமிருதங்களென்னும் † சூரியகிரணங்கள்நீரைக் கர்ப்பமாகத் தரிப்பதுபோல கோசலை முதலிய ராஜபத்தினிகள் பிரஜைகளின் க்ஷேமத்தின் பொருட்டு தேவாம்சம் பொருந்திய கர்ப்பத்தைத் தரித்தனர். ஒரே காலத்தில் கர்ப்பமடைந்தவர்களும் வெளுத்த காந்தியுள்ளவர்களுமான ராஜ ஸ்திரீகள் வெளிக்கிளம்பும் கதிரையுடைய பயிர்கள்போல் விளங்கினர்.

பின்பு தசரதன் மனைவிகள் பின்வருமாறு கனவுகண்டனர்:— "சங்கம், சக்கரம், சார்ங்கம், கதை, கத்தி இவற்றோடு விளங்கும் குட்டையான புருஷர்கள் தம்மை ரக்ஷிப்பதாகத் தோன்றியது. ஸ்வர்ணமயமான இறக்கைகளால் எங்கும் ஒளியைப் பரப்பியவனும் வேகத்தினால் மேகங்களை இழுத்துச் செல்லுகின்றவனுமான கருடன் அவர்களைச் சுமந்து கொண்டிருந்தனன். கொங்கைகளின் இடையில் கணவனால் தாங்குமாறு வைக்கப்பட்ட 'கௌஸ்துப' ரத்தினத்தைத் தாங்கிக்கொண் டிருப்பவளும் தாமரை மலரைக் கையில் விசிறியாகக் கொண்டவளுமான லக்ஷ்மிதேவி அவர்களைச் சேவித்துக்கொண் டிருந்தனள். ஆகாயகங்கையில் ஸ்நானஞ்செய்தவர்களும் வேதாகஸ்யத்தைக் கிரகிப்பவர்களுமான ஸப்தப்பிரம்மரிஷிகளும் அவர்களை உபாசித்துக் கொண்டிருந்தனர்.

இந்தக் கனவை அரசன் அவர்களிடமிருந்து கேட்டு மகிழ்ந்தான். தான் ஜகத்குருவுக்கும் குருவாயிருப்பதால் தன்னைச் சிறந்தவனாக எண்ணினான். பிரதி பிம்பித்த சந்திரன் நிர்மலமான நீரின் மத்திகளில் பலவாறு காணப்படுவதுபோல, ஒருவராயும் எங்கும் நிறைந்தவராயுமுள்ள விஷ்ணு, ராஜ பத்தினிகளின் கர்ப்பங்களில் பலவாறு பிரிந்து வசித்தனர்.

பின்னர் ஔஷதியானது இரவில் இருளையொழிக்கும் ஒளியைப் பெறுவதுபோல, தசாதருடைய பட்டமகிஷியும் பதிவிரதையுமான

---

* கபோலம் = கதுப்பு. † சூரிய கிரணத்தின் உஷ்ண சக்தியானது நீர்நிலையை ஆவிரூபமாக ஏற்று மீண்டும் புவிமீது விடுக்குந் தன்மையுள்ள தாதலினால், "சூரிய கிரணங்கள் நீரைக் கர்ப்பமாகத் தரிப்பது" என்றார்.

கோசலை தக்க சமயத்தில் அஞ்ஞானத்தையொழிக்கும் புதல்வனைப் பெற்றாள். மனோகரமான சரீரத்தைக்கண்டு மகிழ்ந்த தசரதர் தனது புதல்வனுக்கு "இராம"னென்று நாமகரணஞ் செய்தார். அது உலகத்திற்கே மங்களமா யிருந்தது. இரகுவமிசத்தை விளங்கச் செய்கின்றவனும் நிகரற்ற தேஜஸையுடையவனுமான இராமன் பிறந்ததும், பிரசவ கிருகத்திலுள்ள விளக்குகள் ஒளியை இழந்தன. *சரத் காலத்தில் குறைவுற்ற கங்கை, மணற்குன்றிலுள்ள தாமரைப் பலியால் விளங்குவதுபோல இளைத்த சரீரமுள்ள கோசலை, படுக்கையிலிருந்த இராமனுல் விளங்கினாள். கைகேயி 'பரத'னென்னும் நற்குணமுள்ள புதல்வனைப் பெற்றாள். வணக்கம் லட்சுமியை அலங்கரிப்பதுபோல, அவன் தாயை அலங்கரித்தான். நன்கு அப்பியசிக்கப்பட்ட வித்தையானது, அறிவையும் அடக்கத்தையும் உண்டாக்குவதுபோல சுமித்திரை லக்ஷ்மணன் சத்துருக்னன் என்ற இரட்டைப் பிள்ளைகளைப் பெற்றாள்.

அப்பொழுது உலகில் †துர்ப்பிக்ஷம் முதலிய தோஷங்கள் இல்லை. ஆரோக்கியம் முதலிய நற்குணங்கள் காணப்பட்டன. ஸ்வர்க்கமே பூமியிலிறங்கிய புருஷோத்தமனைப் பின்தொடர்ந்தது போலிருந்தது. மாதவன் நான்கு விதமாக உதயமானதும், காற்று தூசியில்லாமல் மெதுவாய் வீசிற்று. அதனால் இராவணனிடம் பயந்த தலைவர்களையுடைய நான்கு திசைகளும் பெருமூச்சு விட்டதுபோ லிருந்தது. இராவணனால் பீடிக்கப்பட்ட அக்கினியும் சூரியனும் முறையே புகையின்றியும் தெளிவாயும் இருந்தமையால் துன்பமற்றவரைப்போல் காணப்பட்டனர். அப்பொழுது இராவணனது மகுடங்களினின்றும் இரத்தினங்கள் நழுவிப் பூமியில் விழுந்தன. அவை ராக்ஷஸ லக்ஷ்மியின் கண்ணீர்த் துளிகளைப்போ லிருந்தன. தசரதன், புத்திரர் பிறந்தமையால் மகிழ்ந்து வாத்தியங்களை முழங்கச் செய்வதற்குள், ஆகாயத்தில் தேவதுந்துபிகள் முழங்கின. தசரதன் அரண்மனையில் கற்பகமலர்மாரி பொழிந்தது. அதுவே புத்திரன் பிறந்தமையால் செய்யவேண்டிய மங்களக் கிரியைகளில் முந்தியதா யிருந்தது.

'ஜாதககர்மம்' முதலிய ஸமஸ்காரத்தைப் பெற்று, செவிலித் தாய் மார்களின் பாலைப் பருகிவரும் குமாரர்கள், முதலில் உதித்த தந்தையின் ஆனந்தத்துடன் விருத்தியடைந்தனர். அக்கினியின்

* சரத் காலம் = கூதிர்காலம். † துர்ப்பிக்ஷம் = பஞ்சம்.

இயற்கையான தேஜஸானது நெய் முதலியவற்றால் வளர்வதுபோல, அக்குழந்தைகளின் இயற்கையான வணக்கம் அப்பியாசத்தினல் வளர்ந்தது *ருதுக்கள் நந்தனவனத்தை அலங்கரிப்பதுபோல, பரஸ்பரம் அன்புள்ள குமாரர்கள் தூய்மையுள்ள இரகு குலத்தை விளங்கச் செய்தனர்.

சகோதரர் நால்வருள்ளும் ஒற்றுமை சமமாயிருந்தும் இராமனோடு லக்ஷ்மணன் சேர்ந்திருப்பதுபோல, பரதனும் சத்துருக்னனோடு சேர்ந்திருந்தனன். காற்றுக்கும் நெருப்புக்கும் உள்ளதுபோலவும் சந்திரனுக்கும் சமுத்திரத்திற்கும் உள்ளதுபோலவும் இராமனுக்கும் லக்ஷ்மணனுக்கும் பரதனுக்கும் சத்துருக்னனுக்கும் ஏற்பட்டிருந்தஒற்றுமை ஒருபோதும் குறைவடையவில்லை. வேனிற்காலத்தின் இறுதியில் கறுத்த மேகங்களால் மிக உஷ்ணமும் சீதமுமற்ற பகல்களைப்போல, அக்குழந்தைகள் † பிரபாவத்தினுலும் வணக்கத்தினுலும் பிரஜைகளின் மனதை வசியஞ்செய்தனர். நான்குவிதமாகப் பிரிவடைந்த தசரதருடைய ‡ ஸந்ததியானது நான்குவிதம் உருவெடுத்து அவதரித்த தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்றநால்வகைப் புருஷார்த்தங்களைப்போல விளங்கிற்று.

நான்கு கடல்களும் இரத்தினங்களால் தசரதனை மகிழ்விப்பதுபோல, தந்தையிடம் பக்தியுள்ள அப்புதல்வர் நால்வரும் நான்கு திசைகளுக்கும் தலைவனை அரசனை நற்குணங்களால் மகிழ்வித்தனர். § ஐராவதம் அசுரர்களின் கத்திமுனைகளை பொடித்த நான்கு ‖ தந்தங்களாலும், நீதியானது ¶ பலசித்தியால் ஊகிக்கத்தக்க நான்கு $ உபாயங்களாலும் திருமால் நுகத்தடிபோல் நீண்ட நான்கு கைகளாலும் விளங்குவதுபோல, அரசர்க்கரசனை தசரதன், விஷ்ணுவின் அம்சங்களான நான்கு புத்திரர்களாலும் நன்கு விளங்கலானன்.

---

* ருதுக்கள் = கார்காலம் முதலிய காலங்கள். † பிரபாவம் = வீரியம், புகழ். ‡ ஸந்ததி = மக்கள் § ஐராவதம் = அஷ்டதிக் கஜங்களி லொன்று. ‖ தந்தங்கள் = கோடுகள்; கொம்புகள். ¶ பலசித்தி = காரியசித்தி. $ நான்கு உபாயங்கள் = ஸாமம், தானம், பேதம், தண்டம் என்பவை.

(பத்தாவது ஸர்க்கம் முடிந்தது.)

* * *

By: M. M. Narayanasawmy Ayer,
Mudikondan, P. O.
(via) Nannilam.

கூட்டுறவாளர்க்கேற்ற சில துறை.

(கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்
ஸ்ரீமான் ஊ. சா. வேங்கடராம ஐயர்)

(முன்தொடர்ச்சி புத்தகம்-7, சஞ்சிகை-4, பக்கம்-76)

உழவினர்க்குதவல்.

இனி, மக்களாவார் அடுத்தபடியாக நிலையிட்டுக் கொள்ளவேண்டியது 'உழவினர்க்குதவும் சங்கங்கள்' என்ற சங்கங்களையே. ஏனெனின், உழவினர் தாம் உலகினர்க்கு வேண்டிய உணவுப் பொருள்களை முட்டுப்பாடின்றிக் கிடைக்கும்படி செய்யக்கூடியவர் ஆதலின் என்க. "பல குடை நீழலும் தங் குடைக்கீழ்க் காண்பர் அலகுடை நீழ லவர்" என்பது வாயுறை வாழ்த்து. இப் படிச் சொல்லப்பட்டதும் சிலர் "உழவினர்க்குதவுவது இன்றியமையாதது" என ஒத்துக்கொண்டு உடனே பரம்பரையாகக் கையாளப்பட்டுவரும் உழு தொழிலில் வேண்டாத மாறுதல்களைக் கூடச் செய்ய முற்படுகின்றனர். மேல் நாடுகளிலிருந்து பல திறப்பட்ட இயந்திரங்களைக் கொண்டுவர முயலுகின்ற னர். அன்னார் "வேற்றுமொழியை இடையிற் புகுத்த விரும்பி வந்ததனால் வீட்டில் உபயோகப்படுத்த வேண்டியவற்றிற்குக் கூடத் தாய் மொழிப்பெயர் மறக்கப்பட்டு வருகின்றது" என்பதையும் மறந்து விடுகின்றனர் போலும்!

நமது நாடோ உழுதொழிலுக்குப் பெயர்போனது. உழுதொழிலைத்தான் முதன்மையான தொழிலாகவுங் கொண்டது. நம்மவருக்கு உழுதொழிலுக்கு உதவியாக ஆண்டவனால் அளிக்கப்பட்டன உயிருள்ள இயந்திரங்களாகிய கால் நடை முதலியனவும், நமது நாட்டிலேயே பிறந்து நமது பக்கத்திலேயே இரு ந்து உண்டு, உடுத்து உதவி உயிர் வாழவேண்டிய கொல்லர், தச்சர் முதலிய சகோதரர்களது உதவியுமே. தற்கால நவநாகரிகத்தார் உயர்வாகக் கருது வன வேற்று நாட்டார் தமது பொருட்பெருக்கைக் கருதிச்செய்து அனுப்பும் உயிரற்ற இயந்திரங்களையும், அத்தகைய பிற கருவிகளையுமேயாம்.

நமது புராதன சாதனமான கால்நடைகளோ நம்முடைய நிலங்களைப் பல வழிகளாலும் வளப்படுத்தி, நல்ல பொருள்களை உண்பெண்ணிக் கொடுத்து நம் மவர்களது உணவுக்கு உபயோகப்படாத வைக்கோல், புல், தவிடு, கழுநீர், கஞ்சி முதலியவற்றைத் தின்று, குடித்து வயிறு வளர்த்து, தங்களுடைய உடல், பொருள், ஆவிகளால் நம்மவர்க்கு வேண்டிய உதவிகளைச் செய்து நம் மை இன்புறச் செய்கின்றன. எஞ்சிய கருவிகளைச் செய்வதற்காக அவற்றைச் செய்யும் தொழிலாளர்களாகிய நம்மவர் தங்கனது உயிர் வாழ்க்கைக்கு வேண் டிய பொருளுதவிகளைப் பெற்று வந்தனர். அந்த இயந்திரங்களோ இயங்கு வதற்கே வேற்று நாட்டு எண்ணெய் முதலியவைகளை உணவாக விரும்புகின் றன. பல இயந்திரங்கள் கிராமாந்தரங்களில் பயனின்றித் துருப்பிடித்துக் கிடப்பதை அடியேன் அறிவேன், அவையோ நாம் அரும்பாடு பட்டுத்தேடிய

பெரும்பொருளை வேற்று நாட்டிற்குக் கொட்டிக் கொடுக்கத் துணை செய்வன. இவை நமது பொருளை நம்மிடத்திலேயே தங்கச் செய்கின்றன. இவற்றால் நமது நாட்டில் உழுதொழில் பெருகி, பண்டங்கள் நிறைதற்குத் துணையாக நமக்கு ஆண்டவனால் அனுப்பப்பட்ட உயிர்க்கருவிகளையே பெரிதும் வளர்த்து நமது நாட்டின் நலத்தைப்பெருக்க முயலுவதையே கூட்டுறவாளர் தமது முதற் கடமையாகக் கொள்ளல்வேண்டும் என்பது போதரும்.

வாயில்லாப் பூச்சிகளும், வன்மையுள்ள வரையில் நமக்கு உழைத்துவந்த வைகளும், "என்பும் உரியர் பிறர்க்கு" என்றபடி இறந்தாலும் நமக்கே நல்ல உரம் ஆகத்தக்கவைகளுமான கால்நடைகளை, அவை நமக்குச்செய்த உதவிக்குப் பதிலுதவிபோல அவற்றை உயிர் நீக்குதற்பொருட்டு வேற்று நாட்டிற்கு அனுப்பப்படும் கொடிய வழக்கம் நிறுத்தப்படுதற்கும் கூட்டுறவாளர்கள் பெரிதும் முயலல்வேண்டும். முதலில் உணவுக்குவேண்டிய தானியமணிகளையும், பின்னர் உடைக்குவேண்டிய பயிர்வகைகளையும் செய்து வரவே முயலல்வேண்டும். நமக்கு வேண்டியவற்றை விளைவித்துக்கொண்ட பிறகே வேற்று நாட்டிற்குத் தேவையானவற்றை விளைவித்தல் வேண்டும். "நாடென்ப நாடாவளத்தன" என்பது பொய்யா மொழி. நல்ல விதைகளை உதவல், தக்க எருக்களை ஆக்கல், உயரிய கால்நடைகளைப் போற்றல் முதலியவற்றையும் செய்தல்வேண்டும். அதிகம் சொல்லுவானேன்.

நமது பழமையான பெருமையை இழக்காமல் புதியதாக வரக்கூடிய அனைத்துப் பெருமைகளையும் சேர்த்துக் கொள்ளத்தக்க வகையில் நமது தொழிலை வளர்த்தல் வேண்டும். இத்தகையினர்க்கே நமது கூட்டுறவாளர்கள் போதிய உதவியைச் செய்யவும் முன்னதாக முன் வரல்வேண்டும். "கைப்பழத்தை விட்டுத் தொரட்டுப் பழத்துக்கு மன்றாடுதல் கூடாது."

தொழிலினர்க் குதவல்.

இங்ஙனம் சங்கஞ்சேர்ந்து இயற்கைப்பொருள்களை உண்டுபண்ணுவதோடு மாத்திரம் நின்று விடுவது தேசநலத்தைவளர்த்ததாகமாட்டாது. அப்பொருள்களை உபயோகப் படுத்தக்கூடிய வகையில் செயற்கைப் பொருள்களாகவும் செய்துகொள்வதுதான் மேலானது. இப்படிச் செய்வதற்கு ஒவ்வொரு தொழிலிலும் வல்லவராகப் பலர் ஒன்றுசேர்ந்து தாம்தாம் பயின்ற தொழில்களால் வரும் பயனைத்தாமும், நாடும் அனுபவிக்கத்தக்க வசதிகளைச் செய்துகொள்ள முற்படல் வேண்டும். தமக்குவேண்டிய பொருள்களைத் தாங்களே செய்து கொள்ள முயலல் வேண்டும். அக்கால், இயற்கைக்கு மாறான செயற்கை இயந்திரங்களைக் கொண்டு—பாடுபட்டு உழைக்கக்கூடிய திடகாத்திரமுள்ள சகோதரர்களது புத்தி சக்தியும், உழைப்பும் நமக்குப் பயன்படாவண்ணம் செய்து, நம்மையும், அவர்களையும் சோம்பேறிக ளாக்கிக்கொண்டு—எதனையும் செய்ய முந்துதல் கூடாது.

நமது புராதன நூல்களை ஆராய்ந்து பார்க்கப்பார்க்க "நம்மவர் முதலில் இயற்கை நெறியிலேயே ஒழுகிவந்தனர்; அப்பால் செயற்கை நெறியிற்செல்வர்

ராயினர்; தற்காலம் மிக உயர்வாக மதிக்கப்படுகிற ஆகாயக்கப்பல், கம்பியில்லாத் தந்தி, ஆச்சரியகரமான ஆட்கொல்லிகள் முதலிய பல கருவித் தொழில்களையும் கைக்கொள்வாராயினர்; இங்ஙனமே ஒவ்வொரு துறையிலும் இயற்கையை மறந்து செயற்கை வாய்ப்பட்டனர்; அதன்பயனாக இறுதியில் இயற்கையின் கோபத்திற்கு உள்ளாகி அழிவுறலாயினர்; அப்பால், 'செயற்கை நெறி தீமையைச்செய்வது; இயற்கைநெறியே இன்பந்தருவது' என்பதை அனுபவத்திற் கண்டு 'பழைய நாயாகவே மாறு' என்பதுபோல ஆதி இயற்கை நெறியையே மீட்டும் கைக்கொண்டு அமைதியுடன் அன்புற்று இன்புற்று வாழ்ந்து வந்தனர்; 'தாமின்புறுவ துலகின்புறக்கண்டு-காமுறுவர் கற்றறிந்தார்' என்றபடி தாம் பெற்ற இன்பத்தை இவ்வுலகமும் பெறவேண்டித் தமது கடைசி அனுபவத்தையே கைக்கொண்டு ஒழுகுமாறு நம்மவர்க்கு வற்புறுத்தியும் எழுதியுங் கூறி வைப்பாராயினர்." என்ற வரலாறே உறுதியாகின்றது.

இங்ஙனமிருக்கத் தற்காலத்தில் நமது நாட்டில் நவ நாகரிகத்தில் அலைப்புண்ட பலர் அச்செயற்கை இயந்திரங்களுக்கு மயங்கிப்பெரிதும் அத்துறையில் முயல்வாராகின்றனர். அதன் பயனாகப் பல இடங்களிலும் அத்தகைய இயந்திரச்சாலைகள்—தொழிற் சாலைகள்—தோன்றவாயின அவற்றால் பெரும்பயனாக அடிக்கடி நம்மாற் கேட்கப்படுவது வேலை நிறுத்தம், வேலையில்லாத் திண்டாட்டம், பஞ்சம், வேண்டாப் பொருள்களின் மிகுதி, அமைதியின்மை முதலியவற்றின் பெருக்கமே. இவற்றோடு வேண்டாப் பொருள்கள் வேற்று நாடுகளிலிருந்து வருவதும் ஒன்று.

நமது நாட்டிலே பல இடங்களிலும் அரிசிமில் என்ற ஒரு வெள்ளம் பெருகிவந்து எத்தனை ஏழைகளின் வாயில் மண்ணைப்போட்டது என்பது கவனிக்கத்தக்கது. "மிஷன் அரிசியினால் தவிட்டுச் சத்துக்குறைந்து மக்களது உடலுக்கு இன்றியமையாது வேண்டப்படும் 'வைட்டமின்ஸ்' என்னும் தவிட்டிலுள்ள சத்து இல்லாமற்போகப் பலர் நோய் வய்ப்பட நேர்ந்திருக்கிறது; அந்தநோயை நீக்கத் தவிட்டைத்தான் சூடுகாட்டி ஔடதம் கொடுக்கவேண்டும்" என்று சாஸ்திர ஆராய்ச்சியாளர்களாற் கேட்கப்படுவதை ஆராய்ந்தறிதல் வேண்டாமா? 'கால் நடைகளுக்கும் மிஷன்தவிடு நோயை உண்டுபண்ணுகின்றது', என்று கேட்கப்படுவதும் கவனிக்கத்தக்கது.

செயற்கைப்பொருள்களின் மாயத்திற் சிக்குண்டு பெரிதும் மயங்கித் தலைவிரித்தாடிய மேல்நாட்டார் அந்தப் பெருமயக்கம் தெளிந்து இயற்கை நெறிக்குத்திரும்பி வருவதையும் கூர்ந்து கவனித்தல் வேண்டும். அன்றியும், இத்தகைய செயற்கை நெறியில் நடைபெறும் தொழில்முறை "பொருளாளரைப் பெரும் பொருளாளராகவும், ஏழைகளை மிக்க ஏழைகளாகவுமே" செய்துவரக் கூடியது என்பதையும், நம்மவருடைய இயற்கையான அறிவாற்றல்களை அழித்துவிடும் என்பதையும் உணர்தல் வேண்டும்.

இதனால், இயந்திரங்களையும், பெருந்தொழிற் சாலைகளையும் அடியேன் முற்றும் வெறுக்கிறேன் என்பதல்ல; எந்தத்தொழில் முறையும் ஒருபுறத்தில் பலரிடம் வறுமைத்துன்பத்தையும் அடிமைத் தொல்லையையும் நிலைநிறுத்தி,

வேறொருபுறத்தில் சிலரிடத்திற் பொருட் பெருக்கத்தையும் அதிகாரத் தன்மையையும் வளர்க்கத் தக்கதாக இருத்தல்கூடாது என்பதும், அவரவரிடத்திலுள்ள அறிவு, ஆற்றல், உழைப்பு இவற்றிற்குத் தக்கவாறு ஒவ்வொருவரிடத்திலும் பொருள், நிலைமை, புகழ் முதலியன பரவி இருக்கத்தக்க சமதுறையாகவே நடைபெறவேண்டும் என்பதுமே அடியேனுடைய தாழ்மையான கருத்துக்களாம்.

ஒரு நாட்டிலே அறம் பெருகி அமைதி நிலவி, இன்பந்துய்த்தற்குத் துணையான நல்ல நிலைமை உண்டாவது விரும்பத்தக்கதும் மேலானதுமாம். அங்ஙனம் இன்றி மறம்பெருகி, அடங்காமை நிலவி துன்பந்துய்ப்பதற்குத் துணையான இழிந்த நிலைமை உண்டாவது விரும்பதக்கதும் மேலானதுமாகாது. இத்தகைய இழிந்த நிலைமையை விரும்புவோர் எந்த நாட்டிலும் இரார். தலையில் இடிக்கும்வரையில் அலட்சியமாக இருத்தல் அத்துணைக்குற்றமுடைத்தன்று; இடித்தபிறகும் அவ்வழியே அடங்காமற் செல்வது அறிவுடையோர்க்கழகன்று. இயற்கையில் நீங்கிய செயற்கை நெறியால் வருவது நன்மையிலும் தீமையே அதிகமாம் என்பது பலரும் அறிந்த உண்மையே.

அன்றியும், ஒவ்வொரு சங்கமும் "தன்னால் அறியப்பட்ட சந்தை"யை வைத்துக்கொண்டு—வாங்குவோர்களையும், அவர்களது தேவையையும் முற்கூட்டி அறிந்துகொண்டு—அவர்களின் தேவைக்குத் தக்க பொருள்களையே செய்தல்வேண்டும். வாங்குவோர் இன்மையால் அழிந்துபோன பலதொழிற்சாலைகளை அடியேன் கண்டிருக்கிறேன். பத்தாயிரக்கணக்கில் — இலட்சக்கணக்கில்—நமது நாட்டுப்பொருளை மேல்நாட்டிற்கு வாங்கிக்கொடுத்த பல இயந்திரங்கள் வேலையின்றித் தூங்குவதையும் கண்டிருக்கிறேன். இன்றும் அத்தகைய நிலைமை நமது நாட்டில் இருக்கின்றது. ஆதலின், நமது தொழிலினர்க்குதவும் சங்கங்கள் தேச நலத்தைக் கருதிப் பெரிதும் இயற்கை நெறியிலேயே ஒழுகி நாட்டினரை இன்புறுத்த முயலுவதைத் தமது முதற் கடமையாகக் கொள்ளல்வேண்டும்.

மொத்தக் கொள்வினை.

இனி, இங்ஙனம் முயன்றுவரின் எத்தகைய சிறு கூட்டத்தினர்க்கும் தங்களுக்கு வேண்டிய பண்டங்களை மொத்தமாக வாங்கத்தக்க வசதி தவறாது உண்டாகியே தீரும். ஆண்டாண்டுள்ள பண்டப்பிரிவினைச் சங்கங்கள் ஒவ்வொன்றும் இத்தகைய நிலைமையைச் சந்திக்கும். அக்கால், அவை ஒவ்வொன்றும் தனித்தனித் தத்தமக்கு வேண்டிய பண்டங்களை மாத்திரம் மொத்தமாக வாங்க முயலாது தங்களோடு சேரக்கூடிய எல்லாப் பிரிவினைச் சங்கங்களையும் சேர்த்துக்கொள்ள முயலல்வேண்டும். ஏனெனில், இச்சங்கங்கள் போட்டிபோடும் தீய முறைமையையும் உண்டுபண்ணுவோர் வாங்குவோர் என்ற இரண்டு உரிமையாளர்க்கும் இடையிற் புகுந்து—இரண்டு விலங்குகளுக்கு இடையிற் புகுந்து கலகமூட்டி இரத்தம் குடிக்க முயலும் நரிபோன்ற தரகர் எனப்படும் ஒரு கூட்டத்தினரால் வரும் தொல்லையையும் விலக்கவே தோன்றின என்பதைக் கூட்டுறவாளர் அனைவரும் அறிவர் ஆதலின் என்க.

இப்படிப் பல பிரிவினைச் சங்கங்கள் ஒன்று சேர்ந்து மொத்தமாக வாங்கிச் சில்லறையாகப் பிரித்தெடுத்துக் கொள்ளத்தக்க நிலைமை உண்டாகுமானால், அதனால் பிரிவினைச் சங்கங்கள் இதுவரையில் அடைந்துவந்த நன்மையினும் மேம்பட்ட நன்மையை எய்தமுடியும் என்பதில் எதும் ஐயமின்று. அக்கால், அதுவரையில் பிரிவினைச் சங்கங்களிற் சேராது விலகி யிருந்தவர்களும் வந்து சேருவர். அதனால் முன்னேயிலும் அதிகமாக நமது இயக்கம் பரவும். பரவவே, இதுவரையில் நம்மிலும் தங்களை வேருகக்கருதி விலகிக்கொண்டிருந்த ஏனையோர் அனைவரும், ஏனைய சங்கங்களும், நமது இயக்கத்திற்குத் தீங்கு சூழ்ந்து கொண்டிருந்தவர்களும் தங்கள் தங்களது நன்மையைக் கருதியேனும் நம்மிடம் வந்துசேருவர். நமது இயக்கம் பகை, நொதுமல் இன்றி எவரையும் சேர்த்துக்கொண்டு அனைவர்க்கும் சம உரிமையை அளிக்கக்கூடிய கற்பகத்தருவுக்கு ஒப்பானது ஆதலின் அன்னருடைய புத்தி சக்திகளும் நமது இயக்கத்திற்குப் பயன்படும்.

இவையெல்லாம் "பேச்சளவில் மாத்திரம் இன்பமாய் இருப்பன; செய்கையிற் காட்ட முடியாதன" என்று சில தன்னலப்பிரியர்கள் சொல்லக்கூடும். ஆனல், அன்னர் மேல்நாடுகளில் இம்முறை "எவ்வளவு விரைவில் இனிது பரவிப்பயனளித்து வருகின்றது" என்பதைக் கூர்ந்து கவனித்துத் தமது ஐயத்தையும், தம்மிடத்திலுள்ள குறைபாட்டையும் போக்கிக் கொள்ளக் கடவர். நமது இயக்கம் வலிவுறுதற்கு இன்றியமையாதன அங்கத்தினர்களிடை ஒற்றுமையும், நம்பிக்கையும், உறுதியும், விட்டுக்கொடுக்கும் குணமும், பொறுமையும் என்பனபோன்ற சில நற்குணங்களே.

இந்த ஏற்பாட்டால் பெரிய சங்கங்களுக்குக் கிடைக்கும் நன்மைகள் சிறிய சங்கங்களுக்கும் கிடைக்கத்தக்க வசதி உண்டாகின்றது. எங்கே எங்கே எந்தஎந்த உபர்ந்தபண்டங்கள் விளைகின்றனவோ அங்கே அங்கேபோய் அந்த அந்த உயரியபண்டங்களை மொத்தமாக வாங்கிவரத்தக்க வசதியையும் செய்துகொள்ளலாம். எவ்வளவுக்கெவ்வளவு விளையும் இடங்களில் மொத்தமாக முன்பணம் கொடுத்துப் பண்டங்கள் கொள்வினை செய்யப்படுகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு செலவுக்குறைவும், பொருளின் மிகுதியும் உண்டாகும் என்பது அனைவரும் அறிந்ததொன்றே. நமது இயக்கத்தின் மூலாதாரக்கொள்கைகளுள் ஒன்ருகிய 'உண்டுபண்ணுவோருக்கும், வாங்குவோருக்குமே விளையும் பண்டங்களின் விலையாகக் கொடுக்கப்படும் பொருள்கள் சேரவேண்டும்' என்பதும் பூர்த்தியாகின்றது. இம்முறையால் நம்மவர்க்குத் தேவையான பண்டங்களுக்கே முதலிடம் கிடைக்கும் என்பதும், வேண்டாப் பண்டங்களால் வரும் பொருள்நஷ்டம் முதலியன வரவேமாட்டா என்பதும் கவனித்தக்கன.

மத்திய சங்கம்.

இங்ஙனம் தங்களுக்கு வேண்டிய உண்டி, உடை, உறையுள் ஆகிய பல வசதிகளைத் தாங்களே தேடிக்கொள்ள முயலும் கூட்டுற வாளர் அவற்றை இனிது நிர்வகிப்பதற்குத்தக்க முன் ஏற்பாட்டை யும் செய்துகொள்ளல் வேண்டும். அதற்கு ஒவ்வொரு மூலாதாரச் சங்கங்களினின்றும் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களைக் கொண்டு நடத் தப்படும் மத்திபசங்கங்கள் தோன்றுதல் வேண்டும். இவை குறிப் பிட்ட ஓரளவு தொகைக்கு மேற்பட்ட பொருள்களைத் தம்மிடம் வைத்துக்கொண்டு மூலாதாரச் சங்கங்களுக்குத் தேவையான காலங் களில் உதவிவரத்தக்க நிலைமையில் இருத்தல்வேண்டும். நமது நாட் டில் இம்முறையில் மாறி மத்திய சங்கங்கள் தோன்றியபின்னரே மூலாதாரச் சங்கங்கள் தோற்றுவிக்கப் படுகின்றன என்பதை அடி யேன் அறிவேன். எனினும், அவை காலக்கிரமத்தில் தனிப்பட்ட வர்களது ஆதிக்கத்தினின்றும் விடுபட்டு மூலாதாரச் சங்கங்களின் ஆதிக்கத்துக்கு வரவேண்டும் என்பதே அடியேனது வேண்டு கோள்.

தற்காலம் அம்முறை தவறியிருப்பதனால்தான் 'மத்திய சங்கத் தார் தங்களது வேலை மூலாதாரச் சங்கங்களுக்குக் கடன்கொடுப்ப தொன்றே, என்று கருதுகிறவர்போலக் காணப்படுகின்றனர். இங் கே, முதலாளிகளின் வாடை வீசுவது உய்த்துணரத்தக்கது. அன் றியும், எந்தத் தொல்லையினின்றும் நீங்க உலகினர் முயலவேண்டு மோ, அந்தத் தொல்லையிலேயே விலக முயலுவதாகச் சொல்லிக் கொண்டே—வலுவில் நுழைந்துகொள்வதாகவும் இது முடிகின் றது. இது கூட்டுறவுமுறையின் தத்துவத்திற்கு முற்றும் முரா ணனது என்பதை அடியேன் அதிகம் வற்புறுத்திக் கூறவேண்டிய தில்லை.

மேற்பார்வை பார்த்தல்.

இனி, மத்தியசங்கத்தார் இவ்வளவோடு நின்றுவிடுதல் கூடாது. தங்களை நன்னிலையில் வைத்துக்கொள்ளப் பெரிதும் முயலல்வேண் டும். அதற்கு அன்னார் செய்யவேண்டியன தங்களது அதிகார எல்லைக்குட்பட்ட மூலாதாரச் சங்கங்களை மேற்பார்வை பார்த்தலே. இப்படிச் சொன்னதும் அதற்குத்தான் 'சூபர்வைஸிங் யூனியன்' என்ற பெயருடன் மேற்பார்வைச் சங்கங்கள் தோன்றி யிருக்கின் றன என்று கூற முன்வரல் கூடும். ஆனால் அவையும் தவறான

முறைமையில் நடைபெறுகின்றன என்பதுதான் அடியேனது கருத்து. இப்பொழுது அந்த யூனியன்களுக்கு எதும் அதிகாரம் இல்லை. முன்பின் ஆராயாது மத்திய சங்கங்களாற் கொடுக்கப்பட்ட பலவிதக் கடன்களையும் வசூல்செய்யவே அவை பெரிதும் உபயோகப்படுத்தப் படுகின்றன.

இம்முறையில் மத்தியசங்கங்களின் வேலைகளைச் செய்கின்ற அவற்றிற்கு அம்மத்தியசங்கத்தார் குந்தியிருக்கக்கூட இடந்தந்துதவிபுரிகிறார்கள் இல்லை. அவை தங்கள் தங்களது முதுகிலேயே தங்களது குச்சைக் கட்டிக்கொள்ளவேண்டிய நிலைமையில் விடப்பட்டுள்ளன. இது 'தேனெடுப்பவன் ஒருவன்; குடிப்பவன் பிறிதொருவன்' என்ற வசனத்திற்கு ஒத்ததாயிருக்கிறது.

நிற்க, "பொதுஜனங்களுக்குக் கூட்டுறவு முறையின் தத்துவங்களை விரித்துரைத்துச் சங்கங்களை நிலைநிறுவுதும், நிலைபெற்ற சங்கத்தினர்க்கு கணக்கு முதலியவற்றைத் தாங்களே வைத்துக்கொள்ளத்தக்க தகுதியை உண்டுபண்ணுவதும், அவற்றைத் தத்துவத்தினின்றும் தவறாது நடந்துகொள்ளுமாறு அடிக்கடி திருத்தி வருவதும் தங்களது கடமை" என்பதை அவை முற்றும் மறந்து நிற்கின்றன. அவசியமானால் தாங்களே அந்தக் கணக்குகளை எழுதிக்கொடுக்க முயலும் இக்கூட்டத்தார், சம்பந்தப்பட்ட ஒவ்வொருவருக்கும் அவற்றைத் தாங்களே வைத்துக்கொள்ளத் தகுதியை உண்டுபண்ணுவது மேலானது என்பதை உணரலாகாதா? ஆகவே தற்காலமுறை மாறிக் கூட்டுறவுமுறையின் தத்துவங்களையும், கணக்குவைக்கும் முறைமைகளையும் நன்கு அறிந்தவர்களை மாதசம்பளம் கொடுத்து உத்தியோகத்தில் அமர்த்தி அவர்களைக் கொண்டு மேற்கூறியாங்குப்போதிய பிரசாரஞ்செய்து மேற்பார்வை பார்ப்பதுதான் நமது இயக்கம் தகுந்த அஸ்திபாரத்துடன் நிலைத்து உரம்பெறத் துணைபுரிவதாம் என்பது ஒரு சிறிது விளங்கும்.

விளைநில மாக்கல்.

இம்முறையே நமது இயக்கம் வளர வளர அக்கால் ஒவ்வொரு சங்கத்திற்கும் 'தானே தனக்கு உதவிசெய்து கொள்வதுதான் மேலானது' என்பதில் உறுதி அதிகமாகும். அதன் பயனாகத் தங்களுக்கு வேண்டிய பண்டங்களை விளைவித்துக் கொள்ளத்தக்க விளைநிலங்களைத் தேடிக்கொள்ளும் உணர்ச்சி உண்டாவதும் இயல்பே. இம்முறையில் அமைக்கப்படும் விலை நிலங்கள் ஒருவருக்கென தனித்

துச் சொந்தமாக அமையா; சங்கத்தின் சொந்தமாகவே அமையும். ஆதலின், அவை 'எனது; உனது' என்ற சிறப்புரிமைகளில் நீங்கி 'நமது' என்ற பொதுத்தன்மையாற் சிறப்பிக்கப்படுகின்றன. இயக்கத்திற் சேர்ந்தவர்களாலேயே அவை பண்படுமாதலின், அவற்றில் வேலைசெய்கின்றவர்களுக்கும் 'பிறர் நிலத்திலே, பிறாது விசேஷ லாபத்திற்காகக் கஷ்டப்பட்டுக் கூலியின்பொருட்டு நாம் வேலை செய்கின்றோம்' என்ற எண்ணம் எழாது, 'நமக்காக நமது நிலத்தில் நாம் வேலைசெய்கின்றோம்' என்ற மகிழ்ச்சியே உண்டாகும். அந்நிலையில் அவரே முதலாளியாகவும், அவரே தொழிலாளியாகவும் ஆகின்றனர் என்பதும் ஆராயத்தக்கது.

இந்நிலைமை உறுதியுறின் அழிவு, காவல், காப்பான் முதலிய நம்பிக்கையைக் குறைக்கும் செயல்களுக்கு இடம் உண்டாகமாட்டாது. அந்தச்செயல்களுக்குச் செலவிடவேண்டிய காலங்களில் ஒவ்வொருவர்க்கும் தங்கள் தங்களது அறிவு வளர்ச்சிக்கும், பிற நன்மைக்கும் சாதனமான துறைகளில் முயலவும் இடம் ஏற்படும். அன்றியும், இங்ஙனம் 'தங்கள் தங்களது நிலங்களில் விளைவிக்கப்படும் பொருள்களே தங்கள் தங்களது உணவுக்கு உபயோகப் படுகின்றன' என்ற நிலைமை ஏற்படின் உலகிலே போட்டி, இலாபம், நஷ்டம், கடன், முதல், வட்டி என்ற தொல்லைகளெல்லாம் நீங்கிவிடும். பலதுறைகளிலும் இத்தகைய உயரிய நிலைமையை ராஸ்டேல் நியாய வழிகாட்டிகள் அடைந்து வருகின்றனர் என்று கேட்கப்படுவதும் ஈண்டு ஆராய்ந்தறியத் தக்கது.

தொடரும்.

நல்லினஞ் சேர்தல்.

மாணிடர்களாகிய நாம் கல்வி கேள்விகளில் தேர்ச்சிப் பெற வேண்டியது அவசியமாகும். அவ்வாறு தேர்ச்சிப்பெற்று உலக இயற்கைகளை நன்கறிவதற்கு, நல்லார் சேர்க்கையே மேன்மையைத் தரும். அவ்வாறு நன்மையைப் பயப்பதற்குத் தூய ஒழுக்கங்களோடு கூடிய கல்வி கேள்விகளிற் சிறந்தவர்களாகிய வல்லுநரைத் தேடி அடைந்து அன்னவர் பழக்கங்களைக் கைக்கொள்வதே நலமாகும். "மலருடன் கூடிய நாறும் மணம்பெறுவது" போலும், "பாலுடன் கலந்த நீரும் பாலாவது" போலும், நாம் நலமுற நல்லா

ை நாடி அவர் மாட்டு பயபக்தியுடன் அவர்கள் மனதிற்கிசைந்தாற் போல் நடந்துவருவதே நல்லினஞ் சேர்தலாகும்.

"அறியாப் பருவத் தடங்காரோ டொன்றி
நெறியல்ல செய்தொழுகி யவ்வு—நெறியறிந்த
நற்சார்வு சாரக் கெடுமே வெயின்முறுகப்
புற்பனிப் பற்றுவிட் டாங்கு." என்றவாறு, பகலவன் முன்கண்ட பனிபோலத் தீயாரோடு கூடிய துன்மார்க்கங்களெல்லாம் பெரியாருடன் சேர்ந்தால் பயத்துடன் ஓடி ஒளியும். இந்நல்லார் சேர்க்கையை ஒருவன் என்று நாடினனோ அன்றே,

"அறிமி னறநெறி யஞ்சுமின் கூற்றம்
பொறுமின் பிறர்கடுஞ்சொற் போற்றுமின் வஞ்சம்
வெறுமின் வினைதீயார் கேண்மை யெஞ்ஞான்றும்
பெறுமின் பெரியார்வாய்ச் சொல்." என்று ஜைன முனிவர்கள் கூறிபவாறு துஷ்ட காரியங்களை விட்டுப் பெரியார் வார்த்தையைக் கேட்டு அதன்படியே நடக்கவேண்டும். இன்னும் இவர்கள் நேசத்தால் முத்தி கிடைக்கும். இதை நோக்கியே,

"முத்திக்கு வித்தாகு முழுதுணர்ந்தோர் பெருநட்பே
தித்திக்கு நாடோறுந் தேவர்பெறற் கருந்திருவுஞ்
சித்திக்கும் படியருளுஞ் செப்பரிதால்." என்று மேலோர் கூறினர். இன்னும் நாலடியாரில் பிறவித்துன்பத்தை வெறுத்திருக்கின்ற பெரியோர்கள்பால் சேரின் நன்மைக்கு ஏதுவாகும் என்று கூறப்பட்டிருக்கிறது.

"அடைந்தார்ப் பிரிவு மரும்பிணியுங் கேடு
முடங்குடம்பு கொண்டார்க் குறலாற்—றொடங்கிப்
பிறப்பின்னா தென்றுணரும் பேரறிவி னாரை
யுறப்புணர்க வம்மாவென் னெஞ்சு." என்பதை உய்த்துணர்க. இப்பெரியோர்கள், தங்களை நேசிக்கவருபவர்களில், மேலோர் கீழோர் என்னும் வித்தியாசம் பாராது அவர்களைத் தங்களைப் போற்பாவிப்பர்.

" ஆயின்மறை முதற்கலைக ளனைத்துமுணர்ந் தறமறம்பார்த்
தேயினிது நன்றிதுதி தென்றுணர்த்து மவர்நட்பை
வீயினுந்தா மறப்பர்களோ மேதையோர் மறப்பரே
நாயினுங்கீழ்ப் பட்டவர்க ளவர்காணி னாநிலத்தே" என்ற

வாறு இதுநல்லது இதுகெட்டது என்று சமயா சமயங்களில் எடுத்துரைக்கும் பெரியார் நட்பை மறக்கலாகுமோ, அவ்வாறு மறப்பவர் நாயினுங் கீழ்ப்பட்டவர்களே யாவர். இன்னும் இம்மேலோர் தங்களைச் சேர்ந்தவர்கட்குத் தீங்குவரின் தங்கட்குவந்ததாக எண்ணுவர். மேலும்,

" சமயம்வரி னிடித்துரைப்பார் தக்கவழிச் செலச்செய்வார்
இமையவர்த முலகுறவு மிருளுலகம் பகையுமா
யமையவறி வுறுத்துவா ரந்தோநூல் கற்றுணர்ந்த
கமையுடையார் நட்பெவர்க்குக் காண்கிடைக்கும் அரிதரிது."

என்றவாறு சமயா சமயங்களில் இப்பெரியார் நற்புத்திப் புகட்டுவார்கள். என்னே இவர் தூய்மை!

பிணி பசி மூப்புத் துன்பங்களோடு கூடிவாழும் மனிதர்களுக்குச் சிறப்பைத் தருவது நல்வினைஞ் சேர்தலே.

" இறப்ப நினையுங்கா லின்னா தெனினும்
பிறப்பினை யாரு முனியார்—பிறப்பினுட்
பண்பாற்று நெஞ்சத் தவர்களோ டெஞ்ஞான்று
நண்பாற்றி நட்கப் பெறின்." என்ற பாடல் சிந்திக்

கத் தக்கது.

2/0460

(தொடரும்)

எஸ். என். இராமு,
கூறைநாடு.

மலையைவிழுங்கிய

மகாதேவன் கதை.

இது, ஒயாச்சிரிப்பைத்தரும் ஒரு மாயா விநோதக்காரன் கதை. இதில் மகாதேவனென்ற ஜெகஜாலப்புரட்டன், இளமையிலேயே இந்திர ஜாலங்களைச்செய்து ஜனங்களை ஏமாற்றுவது, மலையை விழுங்குகிறேனென்று ஒரு பிரவையும் ஊர் ஜனங்களையும் ஏமாற்றுவது, மாயா முயல்களை வளர்த்து தஞ்சாவூர் எத்தர்களை ஏமாற்றி, அந்த முயலை விலைக்குக்கொடுத்து அவர்களுடைய ஐவேசுகளை யெல்லாம் கைப்பற்றிக் கொள்வது, சாமியார் வேஷம் போட்டு உயிரோடு சமாதியாகி மனிதர்களை ஏமாற்றுவது, தஞ்சாவூர் எத்தர்களின் மூக்கைக் கத்தரித்து அவர்களைச் சொல்லாமலோடும்படி செய்வது, தாசிகளை ஏமாற்றி ரயிலில் சக்கின்கிளாஸ் வண்டியில் பிரயாணஞ்செய்வது ரயிலில் சென்ற நாட்டுப்புரத்தானைச் சக்கின்கிளாஸ் வண்டியில் ஏறச்செய்து போலீஸ் சங்கடத்தில் மாட்டிவைப்பது முதலிய பல விநோத செய்கைகளெல்லாம் அடங்கி யிருக்கின்றன. விலை அணா-6.

விநோதகதைத் திரட்டு.

இது, அடங்காச்சிரிப்பை யுண்டாக்கி, அறிவையும் ஆனந்தத்தையும் கொடுக்கும் பல கதைத் தொகுதிகள் அடங்கிய புத்தகம். இதில். தமிழ்ப்பாவிருப்பக் கதை, கூட்டத்திற் புகுந்து வாட்டமடைந்தவர் கதை, அதிகப் பேச்சால் அவஸ்தையடைந்த கதை, பேராசை பெருநஷ்டமான கதை, பெருங்குடியர் இருவர் கதை, பெண்பிள்ளை திருடனைப் பிடித்த கதை, நெளிகொடுத்த கதை, செருக்கால் தீங்கடைந்த கதை, திருடர்கள் வித்வானுக்குச் சன்மானஞ் செய்த கதை, விஷயம் தெரியாமல் சண்டையிட்ட கதை, பெருங்காயம் வாங்கிய கதை, சிலேடைப் பேச்சால் அவமானமடைந்தவன் கதை, விநோத சிலேடைக் கதை, பகல் திருடன் கதை, வாக்குச் சாதுரியத்தால் இலாபம்பெற்ற புலவர் கதை, செம்பும் போனதே கோவிந்தா என்ற கதை, சிலேடைப் புலவர் கதை பேர்போன செவிடன் கதை, பஞ்சலக்ஷணக் கதை, ஒரு சிலேடைக்கதை, கொடாக்கண்டன் கதை, விபூதியால் செல்வங்கொடுப்பவன் கதை, கொசுகு சிங்கத்தை வென்ற கதை, தென்னமரத்தில் புல்பிடுங்கின கதை, புலியிடம் வட்டிக் கணக்குத் தீர்க்கப்போன செட்டியார் கதை, தாடிக்குத் தர்க்கம்பேசிய சாமியார் கதை, கைக்கெட்டினது வாய்க்கெட்டாமற் போன கதை, செல்லாததற்குச் செட்டியார் இருக்கிறார் என்ற கதை, வேலை கடுமையான வேலை எஜமான் இன்னாரென்று தெரியவில்லை என்ற கதை, நன்றியுள்ள எருதின் கதை ஆகிய சுமார் முப்பது கதைகளுக்குமேல் அடங்கி யிருக்கின்றன. சகலரும் வாங்கிப் படிக்கத் தகுந்த அருமை வாய்ந்த புஸ்தகம். விலை அணா 5 தான்.

ஸ்ரீபாலன்.

படிக்கப்படிக்க இனிமையைத் தரும் மகா அற்புதம் வாய்ந்த கற்புள்ள நாவல், நவரசங்களும் பொருந்தியது. மனதிற்கு ஆனந்தத்தைக் கொடுப்பது.

விலை அணா 10.

உதயணன்.

இது, மனதைக் கவரத்தக்க மகாமேன்மை தங்கிய தமிழ் நாவல். சிறந்த வித்வானால் எழுதப்பட்டது. பள்ளிக்கூடத்து மாணவர்களும், மற்றவர்களும் விரும்பிப் படிக்கத் தகுந்தது. அறிவையும் ஆனந்தத்தையும் கொடுக்கத் தக்கது.

விலை அணா 8.

நரிவிருத்தம் மூலமும் உரையும்.

இந்நூல், சீவகசிந்தாமணியை இயற்றிய ஆசிரியராகிய திருத்தக்க தேவரால் செய்யப்பட்டது. வித்வான்களும் உச்சிமேற் கொள்ளத் தக்கது. விரிந்த உரையோடு கூடியது. உயர்ந்த நீதிகளைப் போதிப்பது. எவரும் எளிதில் படித்துணரத் தக்கது.

விலை அணா 4.

கலியாணச் சந்தடியில் தாலிகட்ட மறந்த கதை.

இப்புத்தகத்தில் ஆனந்தமாய் அமைந்துள்ள ஒவ்வொரு அத்தியாயத்தைப் படிக்கப் படிக்க ஆனந்தம் உண்டாகும். புத்தகத்தைக் கீழேவைக்க மனம் வராது. வயிறு குலுங்கச் சிரிப்புண்டாகும். இதில், வாயாடிச்சுப்பி மணப்பேச்சு, தாலிகட்ட மறந்து செய்யுங் கலியாணம், கலியாணத்தில் அம்பட்டன் அவஸ்தை, மாப்பிள்ளைக்கு மீசை மொட்டையாதல், கலியாணத்தில் பஞ்சாங்கக்காரர் கலகம், கலியாணச் சந்தடியில் தாலிகட்ட மறந்து விடுவது, கலியாணப் பெண்ணே பக்திபரிமாறும் வேடிக்கை, விநோத ஊர்வலம், சுப்பம்மாளின் வேடிக்கை இல்வாழ்க்கை, சித்திரக் குள்ளியின் தெய்வ பக்தி, சுப்பம்மாளின் கெட்டிக்காரத்தனம், சுப்பம்மாளின் கற்பு லக்ஷணம், மண்ணை நம்பி மரமிருக்க மரத்தை நம்பி யிலையிருக்க உன்னை நம்பி நானிருக்க உலகம் பொறுக்கவில்லை என்பது, இரத்தினசாமி பிள்ளையினுடைய இல்வாழ்க்கை முடிவு, முதலிய பல விநோத விஷயங்கள் அடங்கி யிருக்கின்றன. வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற் கெழுதிப் பெற்றுக் கொள்ளலாம். இதன் விலை அணா-5

தருமசீலன் புக்டிபோ,

1/2 பாலகிருஷ்ணன் சந்து, ஆச்சாரப்பன் தெரு, ஜி. டி. சென்னை.

மனையடி சாஸ்திரம்.

சௌக்கியமாகவும் சம்பத்துடனும் வாழ விரும்புவோர் வீடு, குளம், கிணறு, தோட்டம் முதலியவைகளை சாஸ்திரப்படி ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். கிரந்தம், தெலுங்கு, தமிழ் முதலிய பாஷைகளில் உள்ளவைகளை தமிழில் எளிய வசன நடையில் புலிவலம் ஆர். கோபால அய்யரால் எழுதப்பட்டது. மேற்படி 1-ம் பாகம் விலை ரூபா 1. மேற்படி 2-ம்பாகம் அணா 9. குளம் கிணறு வெட்ட ஜலாசய நிர்மாண சாஸ்திரம் அணா 8. விருக்ஷாதி சம்ரக்ஷண சாஸ்திர தீபிகை அணா 8. கீழ்கண்ட விலாசத்திற் கெழுதவும்.

ஆர். கோபாலய்யர்,
புலிவலம்
விஜயபுரம் போஸ்டு,
தஞ்சாவூர் ஜில்லா.